# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 21, 2025

Weekly E-paper ● June 21, 2025




# ஆங்கிலம் அவமானம், சமஸ்கிருதம் ஆனந்தமா ?

சுப. வீரபாண்டியன்

## பாலஸ்தீனத்தில் இனஅழிப்பும் இசுரேலின் வெறித்தனமும்!

சாரதாதேவி

## 2026 திமுக கூட்டணி வெல்லும்

தலையங்கம்

## திராவிட இயக்கத்தின் திசைவிளக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்!

தா.ஜெயபாரதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 21, 2025 Weekly E-paper ● June 21, 2025



# ஆங்கிலம் அவமானம், சமஸ்கிருதம் ஆனந்தமா ?

**சுப. வீரபாண்டியன்**

பொறுப்பான இடத்தில் உள்ளவர்கள் எல்லாம், பொறுப்பற்றுப் பேசும் தேசத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித்ஷா, அண்மையில் தில்லியில் நடைபெற்ற ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் ஆங்கில மொழி பற்றிப் பேசி இருக்கிறார். ஆங்கிலம் கற்பதும், பேசுவதும் அவமானம் என்று கருதும் நிலை விரைவில் இந்தியாவில் வரும் என்று அவர் கூறியிருக்கிறார்.

இதனை ஏதோ ஆங்கிலத்திற்கு எதிரான கூற்று என்று மட்டும் நாம் எடுத்துக் கொள்வோமானால், நாம் நம் எதிரிகளை மிகவும் குறைத்து மதிப்பிடுகிறோம் என்று பொருள்! இந்தக் கூற்று, எதிர்காலத்தில் அவர்கள் ஏற்படுத்த விரும்பும் பல ஆபத்துகளை மிகச் சுருக்கமாகவும், மறைமுகமாகவும் சுட்டிக்காட்டுகிறது!



அவர்களின் முதன்மையான நோக்கம் எல்லாம், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வருவது! குறிப்பாக, மொழி பற்றிய பல திருத்தங்களை அவர்கள் நடைமுறைக்கு கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கட்டும் என்று நாம் இதனை எளிதில் புறந்தள்ளி விடக்கூடாது. அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து விட்டு, ராமர் கோயிலையும் கட்டிவிட்டனர். அரசமைப்புச் சட்டத்திலிருந்து 370 ஆவது பிரிவை நீக்கிவிட்டனர். தங்களை மிக உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொண்டே, 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டையும் பெற்றுவிட்டனர். இவ்வாறாக இன்னும் பல செய்திகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்!

இப்போது ஆங்கிலத்தில் கை வைக்கத் தொடங்கி இருக்கின்றனர். நீதிமன்றங்களில் மொழிகளின் பயன்பாடு குறித்து இந்திய அரசமைப்புச் சட்டம் என்ன கூறுகிறது என்பதை நாம் அறிவோம் ! ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளலாம் .....

"Article 348 (1)(a) of the constitution of India States that all proceedings in the supreme court and in every High court Shell be in English language".

என்பதே இன்று வரையில் சட்டமாக உள்ளது. அதாவது, இந்தியாவின் உச்ச நீதிமன்றத்திலும், அனைத்து உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலம் மட்டுமே அலுவல் மொழியாக இருக்கும் என்பது அந்த விதி !

அதனுடைய உட்பிரிவாக, உயர் நீதிமன்றங்களில் மட்டும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, இந்தி அல்லது வேறு ஒரு மொழியை, அந்த மாநில ஆளுநர் பரிந்துரைக்கலாம் என்று இருக்கிறது!

இதனை எல்லாம் அடியோடு மாற்றிவிட்டு, இந்தியை மட்டுமே இந்தியா முழுவதும் வழக்காடு மன்ற மொழியாக, அலுவலக மொழியாக ஆக்குவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதே அமித்ஷா பேச்சின் உட்பொருள்!

ஆங்கிலம் என்னும் அந்நிய மொழியை அகற்றிவிட்டு, இந்திய மொழிகளில் ஒன்றான இந்தியைக் கொண்டு வருவதில் என்ன பிழை என்று சிலர் கேட்கின்றனர். மொழிகளில் இரண்டு வகைகள்தாம் உண்டு! ஒன்று தாய் மொழி, இன்னொன்று அந்நிய மொழி ! இந்த அந்நிய மொழிகளுக்குள், அருகில் உள்ள அந்நிய மொழி, தொலைவில் உள்ள அந்நிய மொழி என்கிற வேறுபாடெல்லாம் இருக்க முடியாது!

இந்தியைத் திணிப்பது என்பது கூட, எதிர்காலத்தில் சமஸ்கிருதத்தைக் கொண்டு வருவதற்காகத்தான். எனவே ஆங்கிலம், சமஸ்கிருதம் என்னும் இரண்டு மொழிகளில், எது நமக்குப் பயன்படும், எது நம்மைப் பயன்படுத்தும் என்று அறிந்து கொள்ள வேண்டும்!

சமஸ்கிருதம் என்பது வெறும் மொழி மட்டுமன்று! அது ஒரு பண்பாட்டு வல்லான்மை! அந்த மொழி நம் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது. ஆனால் ஆங்கிலமோ நமக்குப் பயன்படுகிறது.

உலக நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கு, உலக வரலாற்று, அறிவியல் செய்திகளை அறிந்து கொள்வதற்கு, உலகெங்கும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு என்று பல்வேறு வகைகளில் ஆங்கிலம் நமக்கு உதவுகின்றது! ஆனால் சமஸ்கிருதமோ, தான் தேவபாஷை என்றும், தமிழை நீசபாஷை என்றும் சொல்லி இழிவு படுத்துகின்றது!

நம்மை ஏற்றி விடுகிறது ஆங்கிலம்! நம் மீது ஏறி மிதிக்கிறது சமஸ்கிருதம் !

எனவே ஆங்கிலத்தில் பேசுவது அவமானம் இல்லை! அமித்ஷா போன்றவர்கள் இந்த நாட்டை ஆள்வதுதான் அவமானம் !

●

# பாலஸ்தீனத்தில் இனஅழிப்பும் இசுரேலின் வெறித்தனமும்!

சாரதாதேவி

காசாவில் இன்று ஒரு சிறுவன் பேசுகிறான், “உணவுப் பொட்டலங்களைத் தருவதாகச் சொல்லி, அவர்கள் எங்களுக்கு வில்லைகளைக் கொடுத்தார்கள். நாங்கள் முகாமில் வரிசையில் நின்று கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் இசுரேலியப் படைகள் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். என் கண்ணெதிரே என் தாயை அவர்கள் கொன்றார்கள். என் அண்ணனைக் கொன்றார்கள். யாருடைய உயிருக்கும் இங்கே உத்தரவாதமில்லை. நாங்கள் சிறுவர்கள். சாதாரண பொதுமக்கள். எங்கள் யாரிடமும் ஆயுதங்கள் இல்லை. நாங்கள் யாரும் யூதர்களைத் தாக்கவில்லை. 50 ஷெக்கெல்கள் கூட பெறுமானமில்லாத அந்த வில்லைகளுக்காக யாரும் முகாம்களுக்குப் போகாதீர்கள். உங்கள் சொந்தங்களை இழந்து விடுவீர்கள். எங்கள் உயிர்கள் என்ன அவ்வளவு மலிவானதா? எங்களுக்கு தண்ணீர் இல்லை. உணவு இல்லை. பிறரைப் போல எங்களுக்கு வாழ உரிமை இல்லையா?” என அவன் கேட்கும் கேள்விகள் உலக மாந்தரின் நெஞ்சைப் பிளப்பதாக உள்ளன.

அப்படி அவர்கள் செய்த தவறு என்ன?

1882 இல் தொடங்கப்பட்ட யூத மத இயக்கம் அப்போது ஒட்டோமன் பேரரசாக இருந்த பாலஸ்தீன நிலப்பரப்பின் மீது அவாக் கொண்டு, அங்கே தங்களுக்கென்று ஒரு தேசத்தை உருவாக்கிக் கொள்ள காலனியாதிக்க நாடுகளின் உதவியை நாடின.

1917இல் பால்ஃபோர் பிரகடனம் செய்து, பிரிட்டன் அவர்களுக்கு ஒட்டோமன் பேரரசின் கிழக்குப் பகுதியில் ஒரு தேசம் உண்டாக்க உறுதி அளித்ததாகத் தெரிகிறது. ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் அங்கே கொஞ்சம் கொஞ்சமாகத் தஞ்சம் புகுந்த யூதர்கள் தங்களுக்கென்று வரையறுக்கபட்ட நிலப்பரப்பில் தங்கள் பரவலை நிறுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் மேற்கே பாலஸ்தீன நிலப்பரப்பை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். அதன்பின்னர் 1962இல் அங்கே பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோன்றி, அதன் தலைவர் யாசர் அராபத் உலக நாடுகளுக்குச் சென்று பாலஸ்தீன நாட்டை அங்கீகரிக்கக் கோருகிறார். ஆனால் அவருடைய முயற்சிகள் வெற்றி அடையவில்லை.

ஹிட்லரின் வதை முகாம்களிலிருந்து தப்பியவர்களும், உலகெங்கிலும் இருந்த பிற யூதர்களும், இசுரேலுக்குத் திரும்புமாறு அங்கே இருந்த அரசால் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் அழைக்கப் படுவதும், அங்கே அவர்கள் தங்கள் நிலப்பரப்பை பாலஸ்தீன எல்லைகளுக்கு அப்பால் நகர்த்துவதும், கடந்த ஒரு நூறாண்டாக நடைபெறுகிறது. அது அக்டோபர் 2023 முதல் பாலஸ்தீன இன அழிப்பை மேற்கொண்டு வருவதன் தொடர்ச்சியைத் தான் தற்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிப்பார்கள் என்பது போல இசுரேல், சிறிது இடம் கேட்டு தங்க வந்து, தற்போது




அங்கு இருக்கும் இசுலாமியர்களை விரட்டி அடித்தும், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோரைக் கொன்று குவித்தும், இதுவரை 60,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகக் காங்கிரசு கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா ஆதங்கப்பட்டிருக்கிறார். பல லட்சக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போயும், அகதிகளாகப் புலம்பெயர்ந்தும் இருக்கிறார்கள்.

இந்த மனிதப் பேரழிவில் நம் ஒன்றிய அரசின் நிலை என்ன? உலக அமைதிக்கும், போரில்லா உலகத்திற்கும் உறுதி ஏற்றுக்கொண்ட இந்திய வெளியுறவுக் கொள்கையை, இந்திய மௌனத்தால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. சென்ற வாரம் நடந்த ஐ.நா வில் இசுரேலை போர் நிறுத்தம் செய்யக் கொண்டு வந்த தீர்மானத்தில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## 2026 திமுக கூட்டணி வெல்லும்

ஒன்றிய அரசு கீழடி ஆய்வறிக்கையை ஏற்றுக் கொள்ளா விட்டால் அதிமுக போராடும் என்று அக்கட்சியின் தலைவர்களுள் ஒருவரான உதயகுமார் பேசியிருக்கிறார்.

அவர்கள் ஏன் போராட வேண்டும்? ஒன்றிய அரசின் பாஜகவுடன்தான் இவர்கள் கூட்டணி வைத்துள்ளார்களே! எடப்பாடியார், 'கீழடியை ஏற்றுக் கொண்டால்தான் கூட்டணி' என்று ஒரு நிபந்தனையைப் போட்டு மோடியை ஏற்கச் செய்திருக்கலாமே!

இவ்வளவு எளிமையான வழி இருக்கும்போது போராட்டம்..கத்தரிக்காய் எனக்கூவிக் கொண்டிருக்கிறார் உதயகுமார்.

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தாததற்கு திமுகவே காரணம் என்று கூச்சம் இன்றிப் பேசும் அதிமுக, கொஞ்சம் மோடியின் காதுகளில் அதையும் போட்டு, அந்தச் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தலாமே!

இதையெல்லாம் விட்டுவிட்டு எங்கே சைக்கிள் விபத்து, எங்கே பஸ் விபத்து, எங்கே கொலை - கொள்ளை, அதற்கெல்லாம் காரணம் திமுக அல்லது ஸ்டாலின் ஆட்சிதான் என்று பேசிக்கொண்டு இருக்கிறது அதிமுக.

இது இப்படியிருக்க, சாதிவாரிக் கணக்கெடுப்பு என்று சொன்னாலே பயந்து நடுங்குகிறதாம் திமுக! சொல்கிறார், அன்புமணி. எப்படி? மோடியைப் பார்த்து அன்புமணி நடுங்குகிறாரே, அப்படியா?

அரசியல் என்பது ஒரு கலை. இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும், மக்கள் முன் எப்படிப் பேசவேண்டும், தொண்டர்களை எப்படி வழிநடத்த வேண்டும், அரவணைக்க வேண்டும் என்ற அரசியல் கலைக்கும், தலைமைப் பண்புக்கும் அடையாளமாக இருப்பது திமுக, திராவிட இயக்கம்.

அப்படி இல்லாமல் யாருக்குச் சொந்தம் அதிமுக என்று தலையைப் பிய்த்துக் கொண்டு நான்குகள் பேர்கள், நான்குபக்கம்சண்டை! இது ஒருபுறம். மறுபுறம் அப்பா, பிள்ளை தகராறில் கட்சி யாரிடம் இருக்கிறது என்று தெரியாமல் தவிக்கும் பாமக தொண்டர்கள்.

இவைகளுக்கு எல்லாம் சூத்திரதாரி பாஜக என்பது அவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ,

மக்களுக்குத் தெளிவாகவே தெரிகிறது!

பாஜகவின் குரங்கு வித்தை தமிழ்நாட்டில் இப்போதல்ல, எப்போதும் எடுபடாது!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

தன்னை விலக்கிக் கொண்டுள்ளது இந்தியா. எனில் அதன் பொருள் என்ன? இசுரேலுக்குத் துணை நிற்கும் அமெரிக்காவின் தயவுக்காக, அல்லது இவர்களின் தனிப்பட்ட முதலாளித்துவ நலன்களுக்காக, நாட்டின் வெளியுறவுக் கொள்கையை, உலகளாவிய மனிதாபிமான பார்வையைக் கூடக் கைவிடத் துணிந்துவிட்டார்களா?

ஈரான் அரசு பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகக் களமிறங்கி, இசுரேலைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தது. இசுரேல், ஈரானின் அணு ஆய்த விஞ்ஞானிகளை சுட்டு வீழ்த்தியது. இசுரேல் தாக்கப்பட்டால் அமெரிக்க அரசும் களம் இறங்கும். வட கொரிய அரசு இரானுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளது. ஒரு வட்டாரப் போர் உருவாகும் எல்லா வாய்ப்புகளும் உருவாகி உள்ள சூழலில், பாலஸ்தீன மக்களின் எல்லையற்ற துயரங்களை நிறுத்தும் விதமாக உலக நாடுகளில் மக்கள் இயக்கங்கள் இந்த இன அழிப்புப் போரைக் கைவிடுமாறு இசுரேல் அரசையும் ஐக்கிய நாடுகளையும் வலியுறுத்துகின்றன.

கடந்த வாரம் பிரிட்டனில் பாலஸ்தீனத்தை விட்டு விலகுமாறு இசுரேலைக் கண்டித்து பொதுமக்களின் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. 17.06.2025 அன்று இடதுசாரிகள் தலைமையில் இந்தியத் தலை நகர் புதுதில்லியில் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தி உள்ளார்கள். இன்று 21.06.2025 தமிழ்நாட்டின் தலை நகர் சென்னையில் பாலஸ்தீன ஆதரவு குழு ஒரு மாபெரும் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது. திராவிட இயக்கத் தமிழர் பேரவையும் அதில் கலந்துகொள்வதென முடிவு செய்துள்ளது.

1980களில் உலக நாடுகள் ஐக்கிய நாடுகளின் துணையுடன், 1967இல் எட்டப்பட்ட எல்லை முடிவுகளை ஒட்டி இசுரேல், பாலஸ்தீனம் என இருதேச தீர்மானத்தை முன்மொழிந்துள்ளன. அதையே இதுவரை ஆதரித்தும் வருகின்றன. அதன் அடிப்படையில் இசுரேலின் ஆக்கிரமிப்புகளையும், இன அழிப்புப் போரையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவும் பாலஸ்தீன மக்கள் அச்சமின்றியும் மாண்புடனும் வாழ உலக அரங்கில் மனித நேயச் செயல்பாடுகளை அடர்த்தியாக்குவோம்!



15-06-2025 அன்று கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக இரண்டாம் தளத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை 'தமிழின் சமவுரிமைக்கான போராட்டம்' ஆய்வரங்கம் நடந்தது. இந்நிகழ்விற்கு ஓவியர் ட்ராஸ்கி மருது, சென்னை பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறை பேராசிரியர் சுந்தரம், அப்துல் கலாமிடம் ஆலோசகராக இருந்த பொன்ராஜ், IDRM பாலமுருகன், கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் கருணானந்தன் அவர்கள் தொடக்க உரையாற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்தார். ப.திருமாவேலன், மருதையன், தமிழ் காமராசன், சுகுணா திவாகர் உள்ளிட்டோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் நிறைவுரையாற்றினார். காலை நிகழ்வில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பேராசிரியர் ஜெயராமன் ஆகியோரின் புத்தகங்களைப் பேராசிரியர் கருணானந்தன் வெளியிட, ப.திருமாவேலன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் உரைக்கப்பட்ட ஆய்வுரைகள் முன்பே பெறப்பட்டு, தமிழின சமவுரிமைக்கான போராட்டம் ஆய்வுக் கட்டுரைகள்' எனும் தலைப்பில் நூலாக்கம் செய்யப்பட்டு, பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள் வெளியிட பேராசிரியர் கருணானந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பதிவு செய்து பங்குகொண்ட அனைவருக்கும் 'தமிழின சம உரிமைக்கான போராட்டம் ஆய்வுக் கட்டுரைகள்' வழங்கப்பட்டது. கருஞ்சட்டைப் பதிப்பகம் முன்னெடுத்த நிகழ்வுகளில் மிகச் சிறந்த நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்தது.

# திராவிட இயக்கத்தின் திசைவிளக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்!

**தா.ஜெயபாரதி, திராவிடப் பள்ளி மாணவர்**

திருவாரூர் மாவட்டம் கீரனூருக்கு அருகில் உள்ள பாலூர் என்ற கிராமத்தில் கிருஷ்ணசாமி - சின்னம்மாள் தம்பதியின் மகளாக, இசை வேளாளர் குடும்பத்தில் 1883-ஆம் ஆண்டு பிறந்தார் இராமாமிர்தம் அம்மையார். இவர் வளர்ந்தது மூவலூர் கிராமம் என்பதால் 'மூவலூர் இராமாமிர்தம்' என்று அழைக்கப்படுகிறார்.

தன்திருமண வயதில் தனக்கு இசையும், நடனமும் கற்றுத் தந்த சுயம்புப்பிள்ளையை இராமாமிர்தம் மணந்தார். இராமாமிர்தம் அம்மையாரின் திருமணத்திற்கு ஊரில் கடுமையான எதிர்ப்பு உருவானது. அவர்கள் அதை எதிர்த்து போராடினார்கள்.

1917-ம் ஆண்டு முதல் மயிலாடுதுறை பகுதியில் இசைவேளாளர் குடும்பத்துப் பெண்களை இணைத்து 'நாகபாசத்தார் சங்கம்' என்கிற அமைப்பை ஆரம்பித்தார். இசைவேளாளர் குடியில் திருமணம் செய்ய விரும்பும் பெண்களுக்குத் திருமணத்தை நடத்திவைப்பது இந்த அமைப்பின் நோக்கம் . நாகபாசத்தார் சங்கம் சார்பில் இரண்டு மாநாடுகளை மயிலாடுதுறையில் கூட்டினார். இந்த மாநாடுகளில் திரு.வி. கல்யாணசுந்தரனார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அவர் தன்னுடைய நவசக்தி இதழில் அம்மையார் பற்றி எழுதினார். அது காந்தியின் கண்களுக்குப் படவே காந்தி இராமாமிர்தம் அம்மையாரை காங்கிரஸில் இணையும்படி அழைத்தார். அப்போது காங்கிரஸ் கட்சியில் இருந்த திருவிக, வரதராஜீலு நாயுடு, பெரியார் ஈ.வெ. ராமசாமி போன்றவர்கள் தேவதாசி முறை ஒழிப்புக்காகக் குரல் கொடுத்து வந்தனர்.

1925-ல் பெரியார் காங்கிரசில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கிய போது இராமாமிர்தம் அம்மையாரும் வெளியேறி, பெரியார் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். ஈ.வெ.ரா. நடத்திய 'குடியரசு' இதழில் இராமாமிர்தம் அம்மையாரின் கட்டுரைகள் வெளிவந்தன. மூவலூர் இராமாமிர்தம், திராவிட இயக்கத்தின் முதன்மைப் பெண் சிந்தனையாளராகத் திகழ்ந்தவர். அந்தக் காலத்தில் பெண்கள் அரசியல் மற்றும் சமூக விஷயங்களில் பங்கேற்பது மிகவும் அபூர்வமான ஒன்று. ஆனால் மூவலூர் அம்மையார் தனது பேச்சுதிறன் மற்றும் எழுத்துத்திறன் மூலம் திராவிட இயக்கத்தின் முக்கியமான உரையாளர் மற்றும் செயல்வீரராக மாறினார்.

பெண்கள் திருமண வசதி, கல்வி, மற்றும் சமத்துவம் குறித்து அவர் எழுதிய கட்டுரைகள், நாடகங்கள், உரைகள் அனைத்தும் திராவிட இயக்கத்தின் கோட்பாடுகளுடன் இணைந்து செயல்பட்டன.

1930 இல் சென்னை மாகாணத்தில் தேவதாசிமுறை ஒழிப்பைச் சட்டமாகக் கொண்டுவர டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முயன்றபோது அவருக்குத் துணை நின்றார் பெரியார். ஆனால் அப்போது அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. பின்னர் 1947-ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் வழியாகவே தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. இராமாமிர்தம் அம்மையார் தன்னுடைய எண்பதாம் வயதில் 27.06.1962 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அவரின் நினைவாக அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழ்நாடு அரசின் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஏழைப் பெண்கள் திருமண உதவித்திட்டம்' என்று பெயர் சூட்டினார்.

இன்று, தமிழக அரசு உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கு, உயர்கல்வி பயில மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் என்ற பெயரில் மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கிவருகிறது தமிழ்நாடு அரசு.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian